***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 168/2021 – P.W. 3 (LW3)***

| | |
|---|---|
| *Name* | அருள்மணிகண்டன் |
| *Father/Husband's Name* | கருப்பையன் |
| *Village* | செருமங்கலம் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 32 |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 07.07.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தில் வேலை செய்து வருகிறேன்.

கடந்த 22.02.2020 ம் தேதியன்று மதியம் 03.15 மணியளவில் தஞ்சாவூர் to மன்னார்குடி ரோட்டில் செருமங்கலம், உடையார்தெரு 5 ம் நம்பர் பாலம் அருகே நான் நின்று கொண்டிருந்தபோது மேற்கில் இருந்து கிழக்குநோக்கி வந்த Bolero நான்கு சக்கர வாகனம் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து தஞ்சாவூர் to மன்னார்குடி ரோட்டில் வந்த சைக்கிளில் வந்த நபர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. சைக்கிளில் வந்தவர் பெயர் கிருஷ்ணன் என்று தெரிந்து கொண்டேன். நான் விபத்திற்கு அருகில் இருந்ததால் நான் அவரை தூக்கி பார்த்தபோது தலையின் பின்பகுதியில் அடிப்பட்டு இரத்தம் வந்தது. என்னுடன் சுபாஷ் என்பவரும் அங்கு வந்தார். நானும், சுபாஷீம் ஆம்புலன்சு மூலமாக மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு கிருஷ்ணனை அழைத்து சென்றோம். அவரிடம் இருந்த செல்போனை எடுத்து அவருடைய வீட்டிற்கு தகவல் சொன்னோம். அவர்கள் வீட்டில் இருந்து மருத்துவமனைக்கு உறவினர்கள் வந்ததும் நானும், சுபாஷீம் வீட்டிற்கு கிளம்பி விட்டோம். மேற்படி விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்தவர் மயிலாடுதுறையை சேர்ந்த ஷேக் தாவூத்

என்று தெரிந்து கொண்டேன். நான் அவரை பார்த்தேன். நீதிமன்றத்தில் உள்ள ஆஜர் எதிரிதான் அவர். இச்சம்பவம் குறித்து 27.02.2020 ம் தேதியன்று என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

27.02.2020 ம் தேதியன்று போலீசார் விசாரித்த நிலையில் வேறு எந்த தருணத்திலாவது விசாரித்தார்களா என்றால் 22.02.2020 ம் தேதியன்று சம்பவத்தன்று விசாரித்தார்கள். அன்று போலீசார் விசாரித்தபோது எழுதிகொண்டார்கள். கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையின் போது எங்கள் வீட்டிற்கு அருகாமையில் நின்று கொண்டிருந்தபோது மேற்படி விபத்து நடந்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் நான் போனேனா என்றால் நான் திண்ணையில் நின்று கொண்டிருந்தேன். பின்னர் மொமைல் பார்த்துக்கொண்டிருந்தேன். சத்தம் கேட்டு விபத்து நடந்த இடத்திற்கு வந்தேன் என்றால் சரிதான். நானும், சுபாஷீம் விபத்து நடந்த இடத்திற்கு வந்தோம் என்றால் சரிதான். நானும், சுபாஷீம் அடிப்பட்டவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றால் சரிதான். அப்போது பஸ் ஸடாப் இல்லை. சம்பவம் நடந்த இடத்தில் தான் என்னுடைய வீடு உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு முன்னும், பின்னும் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். கிருஷ்ணன் அடிப்பட்டு இறந்த நபர் வயதானவர். வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி திரும்பும் போது இந்த விபத்து நடந்தது என்றால் அவர் திரும்பி விட்டார். விபத்து நடந்த இடத்தில் வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி திரும்பும் போது மேற்கில் இருந்து வரும் வாகனங்களையும், கிழக்கு நோக்கி வரும் வாகனங்களை கவனமாக பார்த்து திரும்ப வேண்டும் என்றால் சரிதான். விபத்து நடந்த சம்பவ இடம் போக்குவரத்து உள்ள பிரதான சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு வடபுறமும் தென்புறமும் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். கிருஷ்ணன் என்னிடம் வேலை பார்த்தவர் இல்லை. அவரை பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது. பின்னர் கேட்டு தான் தெரிந்து கொண்டேன். வாகனத்தின் நம்பர், எதிரியின் பெயர் எல்லாம் கேட்டு தான் தெரிந்து கொண்டேன். யாரை கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் அவர் வண்டியில் இருந்து இறங்கும் போது கேட்டு தெரிந்து கொண்டேன். 22.02.2020 ம் தேதியன்று நான் மருத்துவமனையில் இருந்தபோது வடுவூர் போலீசார் மருத்துவமனையில் விசாரித்தபோது கிருஷ்ணன் மனைவி, நானும் எவ்வித நடவடிக்கையும் வேண்டாம் என்று சொன்னோம் என்றால் சரியல்ல. என்னுடைய

வீடு சம்பவ இடத்தில் விபத்து நடந்த இடத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரிட்டு பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன கிருஷ்ணன் வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த கிருஷ்ணன் மேற்கில் நோக்கி வந்த எதிரி ஓட்டி வந்த வாகனத்தை பார்க்காமல் சைக்கிளிடோடு நான்கு சக்கர வாகனத்தில் மோதி சைக்கிளிடோடு தரையில் கீழே விழுந்து தலையில் காயத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இறந்துபோனவருக்கு நஷ்டஈடு கிடைக்க வேண்டும் என்று காவல் துறையினரால் ஜோடிக்கப்பட்ட வழக்கில் தான் நேரிட்டு பார்ககாத சம்பவத்தை தற்சமயம் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் போது 5ம் நம்பர் வாய்காலில் நின்று கொண்டிருந்ததாவும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல .

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi